Registered as a Newspaper in Ceylon

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

போன் 389 National Tamil Daily தேசிய தினசரி தபாற் பெட்டி: எண் 49

மலர் 6 யாழ்ப்பாணம் சோபகிருது பங்குனி 24 ஆம் நாள் துல்கஃதா 22 (6-4-64) திங்கட்கிழமை இதழ் 56

ஈழநாடு
சந்தா விபரம்
இந்தியா — இலங்கை

| | வாரப்பதிப்பு உட்பட | வாரப்பதிப்பு மட்டும் |
|---|---|---|
| 1 வருடம் | 48-00 | [illegible]-00 |
| 6 மாதம் | 25-00 | 6-50 |
| 3 மாதம் | 13-00 | 3-25 |

தமிழ் மக்கள்

# உயர்விலும் தாழ்விலும் நாம் பங்கு கொள்வோம்

## இடதுசாரிகள் அரசாங்கத்துடன் சேராவிடில் சர்வாதிகார ஆட்சி ஏற்படும்

### முற்றவெளிக் கூட்டத்தில் என். எம். பேச்சு

யாழ்ப்பாணம், திங்கள்

**சோஷலிஸத்திற்காக இன்றுவரை போராடி வந்த சமசமாஜக்கட்சி எந்தவிதமான முடிவை செய்யினும் தமிழ்பேசும் மக்களை எவ்வகையிலும் பாதிக்காத வகையில் செய்யுமென்றும், தமிழ்பேசும் மக்கள் கட்சியில் வைத்திருக்கும் நம்பிக்கையை இழக்கக்கூடாது எனவும், தமிழரின் உயர்விலும் தாழ்விலும் சமசமாஜக் கட்சி ஒன்றி இணைந்திருக்கும் எனவும் டாக்டர் என். எம். பெரேரா இன்று முற்றவெளி மைதானத்தில் நடைபெற்ற பகிரங்கக் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.**

இப்பொழுதுள்ள நெருக்கடியான அரசியல் சூழ்நிலையில் இடதுசாரி முன்னணி, அரசாங்கத்துக்கு கைகொடுத்து உதவவேண்டியது அவசியமாகும் என்றும், அப்படியில்லாவிடில் தொழிலாளர் வர்க்கத்தின் எதிர்காலத்தை நிர்ணயமாக கூறமுடியாதெனவும், அது முதலாளித்துவ சர்வாதிகாரத்துக்கு நிச்சயமாக வழி வகுக்கும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

வடபிரதேச சமசமாஜ வாலிப சம்மேளனத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட இந்த பகிரங்கக் கூட்டம், காலையில் நடைபெற்ற சம்மேளனத்தின் இரண்டாவது மகாநாட்டை தொடர்ந்து நடைபெற்றது. பகிரங்கக் கூட்டத்திற்கு முன்னர் நகரமண்டபத்திலிருந்து ஊர்வலம் ஒன்று சென்றது.

டாக்டர் என். எம். பெரேரா பேசுகையில் மேலும்குறிப்பிட்டதாவது:-

நுவரெலியாவில் நடைபெற்றகூட்டத்தில் பிரதமர் தாம் வலதுசாரிகளுடன் சேரப் போவதில்லை எனக்கூறியதுடன் இடதுசாரிகளின் உதவியையும் கோரினர். இடதுசாரியினர் அரசாங்கத்துக்கு இந்த நேரம் ஆதரவு கொடுக்கவில்லையெனில் வலதுசாரி சர்வாதிகார ஆட்சி ஏற்படும். இதற்கு நாம் இடம் கொடுக்கக்கூடாது.

இடதுசாரிகள் ஆதரவு கொடுக்காவிடில் பிரதமர் வலதுசாரிகள் பக்கம் திரும்பலாம். நாளை என்ன நடக்கும் என்று கூறமுடியாத நிலையில் இருக்கிறது. இன்றுள்ள சூழ்நிலையை சாதகமாக்கி சோஷலிஸத்தை உருவாக்க வேண்டும்.

சர்வாதிகாரம் என்ற பிரச்னை சிறிய பிரச்னை அல்ல. இந்திய பிரச்னை, தமிழ் மொழிப் பிரச்னைகளை தீர்ப்பதற்கு சர்வாதிகார ஆட்சியில் இடமில்லை.

(6-ம பக்கம் பார்க்க)

## மகாநாட்டின் முக்கிய தீர்மானங்கள்

யாழ்ப்பாணம், திங்கள்

**இலங்கையிலுள்ள சிறுபான்மையினரின் உரிமைகளைப் பெறுவதற்கு லங்கா சமசமாஜக்கட்சி உடனடியாக முயற்சி செய்யவேண்டுமென்று கட்சியின் தலைமைப்பீடத்தைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானமொன்று நேற்று யாழ்ப்பாணம் நகரமண்டபத்தில் நடைபெற்றசமசமாஜக்கட்சியின் வடபிரதேச சமசமாஜ வாலிப சம்மேளனக்கிளையின் இரண்டாவது மகாநாட்டில் ஏகமனதாகநிறைவேறியது.**

தென்னிலங்கையிலிருந்துவந்த ஐம்பதுபிரதிநிதிகளும் தலைவர்கள் டாக்டர் என். எம். பெரேரா, டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா, திருமதி விவியன் குணவர்த்தன, திரு. எட்மன்ட் சமரக்கொடி ஆகியோரும் இம்மகாநாட்டில் கலந்துகொண்டனர்.

சுமார் ஐநூறு பிரதிநிதிகள் கலந்துகொண்ட இந்த மகாநாட்டிற்கு பத்திரிகை நிருபர்கள் எவரும் அனுமதிக்கப்படவில்லை.

ஸ்தலஸ்தாபன சபைகள் அந்தந்தப் பகுதியிலுள்ள மக்கள் பேசும் மொழிகளில் நிர்வாகம் நடத்த அனுமதியளிக்கப்படவேண்டுமெனக் கேட்டுக்கொள்ளும் தீர்மானமும் மகாநாட்டில் நிறைவேறியதாக தெரியப்படுகிறது.

வேலையில்லாத் திண்டாட்டத்தை நீக்கவேண்டுமெனவும் அதற்கானவழிவகைகளை லங்கா சமசமாஜக் கட்சிமேற்கொள்ளவேண்டுமெனவும் கேட்டுக்கொள்ளும் தீர்மானமும் நிறைவேறியதாகத் தெரிகிறது.

சிறுபான்மைத் தமிழருக்கு செனட்சபையில் ஒரு பதவி அல்லது ஜனப்பிரதிநிதிகள் சபையில் ஒரு ஸ்தானம் கிடைப்பதற்கு ஒழுங்குசெய்யவேண்டுமெனக் கேட்டுக்கொள்ளும் தீர்மானம் மகாநாட்டில் நிராகரிக்கப்பட்டது. சமசமாஜக் கட்சியில் சாதிப பிரச்னைக்கு இடமில்லையென்றும் அவர்களுக்கென தனியாக ஒரு தொகுதியையோ ஒரு பதவியையோ ஒதுக்கி சாதி அடிப்படையில் தெரிவு செய்வது சாதிப் பிரச்னைக்கு ஆதரவு கொடுப்பதாகுமென பலர் கண்டித்துப் பேசினர். இதன்பின் பிரேரணை நிராகரிக்கப்பட்டது.

## 22 தொழிலாளர்கள் திடீர் வேலைநீக்கம்

யாழ்ப்பாணம், திங்கள்

பரந்தனிலுள்ள விவசாயக் கைத்தொழில் ஸ்தாபனத்தில் கடந்த எட்டு வருடங்களாகக் கடமையாற்றிவந்த 22 தொழிலாளர் எந்தவித முன்னறிவித்தலும் கொடுக்கப்படாமல் வேலைநீக்கஞ் செய்யப்பட்டுள்ளனரெனத் தெரியவருகிறது. திடீர்வேலைநீக்கஞ் செய்யப்பட்ட இத்தொழிலாளர்களுக்குரிய கடந்த மாத வேதனமும் கொடுக்கப்படவில்லை எனக் கூறப்படுகிறது.

கிளிநொச்சி கிராமசபைத் தலைவரினால் நடத்தப்பட்டு இம்மாதம் பிறவுன் அன்ட் கம்பெனியாரால் பொறுப்பேற்கப்பட்ட "ஆன்கோ" விவசாய கைத்தொழில் ஸ்தாபனத்தில் நீண்டகாலமாக வேலைசெய்து வந்த தொழிலாளர்கள் பலர் திடீர் வேலைநீக்கம் செய்யப்பட்டது குறித்து கிளிநொச்சி சமசமாஜ வாலிப முன்னணியின் தலைவர் திரு. ஆனந்தசங்கரி, தொழிற் கமிஷனரிடம் முறையிட்டுள்ளார். இது சம்பந்தமாக விசாரணை செய்து உடன் நடவடிக்கை எடுக்குமாறும் கமிஷனரை அவர் கோரியுள்ளார்.

தோட்ட நிலம் சுவீகரிப்பு

## "அரசாங்கத்தின் முடிவு அச்சம் தரக்கூடியது"

### தோட்ட முதலாளிமார் சங்க தலைவர் கருத்து

கொழும்பு, ஞாயிறு

"கிராம விஸ்தரிப்புக்காக" ஒவ்வொரு தொகுதியிலிருந்தும் இரண்டு சதவிகித தோட்டநிலத்தைப் பெறுவதென்ற அரசாங்கத்தின் முடிவினால் அச்சம்தரக்கூடியதொரு நிலைமை இப்பொழுது தோன்றியுள்ளது என்று இலங்கை தோட்ட முதலாளிகள் சங்கத்தின் தலைவரான திரு. வி. ஜி. டபிள்யு. ரத்னயக்கா குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைத் தோட்ட முதலாளிமார் சங்கத்தின் வருடாந்தக் கூட்டத்தில் உரை நிகழ்த்துகையில்தான் திரு. ரத்னயக்கா மேற்கண்டவாறு கூறினர். இக்கூட்டம் நேற்று இலங்கை வர்த்தகசபைக் கட்டடத்தில் நடைபெற்றது.

ஒவ்வொரு தொகுதியிலிருந்தும் இரண்டு சத விகித தோட்டககாணிகளை சுவீகரிப்பதென்ற அரசாங்கத்தின் முடிவு தனிப்பட்டவர்களுக்கு மட்டுமே பலனைக் கொடுக்கக்கூடியது என்றும் திரு. ரத்னயக்கா கூறினர்.

திரு. ரத்னயக்கா தொடர்ந்து பேசுகையில்: ஆயிரக்கணக்கான ஏக்கர் தேயிலை, ரப்பர் காணிகளை அரசாங்கம் ஏற்கனவே சுவீகரித்துவிட்டதென்றும் இக்காணிகளில் பல

(6-ம் பக்கம் பார்க்க)

### நீச்சல் கைவிடப்பட்டது

யாழ்ப்பாணம், திங்கள்

தென் இந்தியாவிலுள்ள கோடிக்கரையிலிருந்து பாக்குநீரிணையை நீந்திக் கடக்கும் முயற்சியில் ஈடுபட்ட மூன்று நீச்சல் வீரர்கள் நேற்றுமாலை சீதோஷ்ண நிலை காரணமாக இடைத்தூரத்தில் நீச்சலைக் கைவிட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சனிக்கிழமை காலை 7 மணிக்கு கோடிக்கரையிலிருந்து திருமதி அசிலின் டயஸ், திருவாளர்கள் பொரிஸ்மார்க், ஜோர்ஜ் வன்னியப்பா ஆகியோர் நீந்த ஆரம்பித்தனர். ஆரம்பத்திலிருந்த சீதோஷ்ண நிலையின்படி நேற்றுக் காலை வல்வெட்டித்துறை வந்துசேர்வார்கள் என எதிர்பார்க்கப்பட்டது. கோடிக்கரையிலிருந்து பாக்குநீரிணையை நீந்திககடக்க முதலில் முயற்சித்தவர்கள் இவர்களே.

## மணிவாக்கு

'நான்' என்ற எண்ணம் செத்துவிட்டால் சரண்டப்படுவதாகவோ, ஒதுக்கப்படுவதாகவோ அல்லது உயர்த்தப்படுவதாகவோ நாம் உணரமுடியாது.

— ஹென்றி டிரம்மண்ட்

ஈழநாடு

EELA NADU National Tamil Daily Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna
Phone 389

பங்குனி ௴ 24 உ (6-4-64)

## அவசரகாலம் முடிந்தது

சென்ற சனிக்கிழமை 4-ந் திகதியுடன் இலங்கையில் அவசரகாலம் முடிவடைந்தது. இத்துடனே அத்தியாவசிய சேவைகள், வேலைநிறுத்தங்கள், மந்திரிசபைச் செய்திகள் தணிக்கை முதலியனபற்றி வெளியிட்டிருந்த அவசரகால விசேஷவிதிகளும் காலாவதி அடைந்துவிட்டன. இதுகுறித்து ஒருசில குட்டி சர்வாதிகாரிகளைத் தவிர, பொதுவாக மற்ற அனைவரும் ஆறுதலுடன் வரவேற்பார்கள்.

மின்சார இஞ்சினியர்கள் திடீர் வேலைநிறுத்தம் செய்ததாலேயே இம்முறை அவசரகாலப் பிரகடனம் செய்யப்பட்டதற்குக் காரணம் கூறப்பட்டது. ஆஸ்பத்திரி டாக்டர்கள் வேலைநிறுத்தத்தாலும் பொதுமக்களுக்குப் பெரும் சங்கடம் ஏற்பட்டிருந்தது. டாக்டர்கள் சம்பளம், இஞ்சினியர்கள் கோரிக்கை இவை பற்றிப் பேச்சுவார்த்தைகள் நடைபெறுகின்றன. இப்பேச்சுகள் வெற்றிபெறுவிட்டால் மீண்டும் அவர்கள் வேலைநிறுத்தம் செய்வார்களா? அல்லது 21 கோரிக்கைகளை விடுத்துள்ள தொழிற்சங்கங்கள் அவற்றைப் பெறுவதற்காக வேலைநிறுத்தம்செய்வார்களா? இப்போது அவசரகால பிரகடனம் இல்லாததாலும் பார்லிமெண்ட் சபை ஜூலை மாதத்திலேயே கூட்டவிருப்பதாலும் அவர்கள்வேலைநிறுத்தம் செய்வதற்குச்சட்டத் தடை எதுவுமில்லை.

அவர்கள் வேலைநிறுத்தம் செய்வதாயின் அரசாங்கம் முன்கூட்டியே பார்லிமெண்ட் சபையைக் கூட்டி அவசரகாலத்தை மீண்டும் பிரகடனம் செய்யக்கூடும். என்றாலும் அவ்வித நிலைமை ஏற்படாதவாறு சம்பந்தப்பட்டவர்கள் நடந்து கொள்வார்களென்றும் பேச்சுவார்த்தைகள் மூலமே எல்லாப் பிரச்னைகளையும் சுமுகமாகத் தீர்த்துக் கொள்வரென்றும் பொதுமக்கள் நம்பிக்கையுடன் எதிர்பார்க்கின்றார்கள். பொதுஜனநன்மையைப் பாதிக்கும் எந்தநடவடிக்கைக்கும் பொதுமக்களின் ஆதரவு இருக்க முடியாது. ஏற்கனவே டாக்டர்கள், இஞ்சினியர்கள் வேலைநிறுத்தத்தைப் பொதுமக்கள் கண்டித்திருப்பதால் மீண்டும் அவர்கள் எக்காரணம்பற்றியும் வேலைநிறுத்தம் செய்வது தேசத்துக்கோ அவர்களுக்கு நலையோ ஆகாது.

இதேசமயம் இந்த அரசாங்கம் தன் ஆட்சிக்காலத்தில் பெரும்பகுதியிலும் அவசரகாலப் பிரகடனம் செய்துள்ளது பற்றி அது பெருமைப்பட முடியாது. ஏனெனில் அவசரகால விசேஷ அதிகாரங்கள் மக்களின் பல ஜனநாயக உரிமைகளை மறுப்பதுமாகும். மொழிப்பிரச்னை, தொழிற்சங்க பிரச்னை இக்காரணம்பற்றியே அரசாங்கம் அவசரகாலத்தைப் பிரகடனம் செய்ய வேண்டி ஏற்பட்டதாகக் காரணம் கூறப்பட்டது. அவ்விரு முக்கிய பிரச்னைகளும் இன்னும் திருப்திகரமாகத் தீர்க்கப்படவில்லை.

மொழிப் பிரச்னையை சர்வகட்சி அடிப்படையில் தீர்ப்பதாக அரசாங்கம் அறிவித்தது. இதன்பயனாக தமிழரசுக் கட்சியும் தன் நேரடி நடவடிக்கையை ஒத்திவைத்துள்ளது. இவ்விஷயமாக அந்தரங்கத்தில் பேச்சுவார்த்தைகள்ஏதும் நடைபெறுகின்றனவா என்பதும் தெரியவில்லை. நாட்டின் மேலான நன்மையை முன்னிட்டு, இப்பிரச்னைக்கு இனியும் தவக்கம் செய்யாமல் ஒரு சுமுகமான முடிவு செய்யப்பட வேண்டும். அவசரகாலம் நீடித்தும் அடிக்கடியும் பிரகடனம் செய்வது காரணமாக பொலிஸ் அதிகாரிகளில் சிலர் அதிகாரத்திமிர் பிடித்து அத்துமீறிக்காரியங்கள் செய்து பொதுமக்களுக்குப் பல இம்சை அளிக்க ஏதுவாகின்றது. அவ்வித நிலைமை மீண்டும் ஏற்படாமல் பார்த்துக் கொண்டு பொதுமக்களின் நன்மையைப் பாதுகாக்க வேண்டியது அரசாங்கம் உள்ளிட்டு சம்பந்தப்பட்ட அனைவரின் மேலான கடமையுமாகும்.

# மொழிப்பிரச்னை: சர்வகட்சிக் கூட்டம் எப்போது?

## எரிகிற கொள்ளியில் எந்தக்கொள்ளி நல்லகொள்ளி?

—நமது அரசியல் நிருபர்—

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியோ அல்லது யு. என். பி எனும் ஐக்கியதேசியக் கட்சியோ வடமாகாணத்தின் பக்கம் தலைகாட்டவும் பலகாலமாகத் துணியவில்லை. இந்நிலையில் சமசமாஜக் கட்சித்தலைவர்கள் தென்னிலங்கையிலிருந்து இங்குவந்து பெரிய ஊர்வலம் நடத்தி கூட்டம் போட்டுப் பேச முடிந்துள்ளது பல விதங்களிலும் குறிப்பிடத்தக்கதாகும். கம்யூனிஸ்ட்கட்சித் தலைவர்கள் பலரும் இங்கு வந்து இவ்விதமே பிரசாரம் செய்திருக்கிறார்கள்.

சமசமாஜ், கம்யூனிஸ்ட்கட்சித் தலைவர்கள் வடமாகாணத்துக்குத் தைரியமாக வருகையில் ஏன் யு. என். பி., சுதந்திரக்கட்சித் தலைவர்கள் இங்கு வரத் தயங்க வேண்டும்? இது முக்கியமான கேள்வி. தனிச் சிங்களச் சட்டத்தை இவ்விரு கட்சிகளும் ஆதரித்து அவசரமாக நிறைவேற்றி, தமிழ்ப் பகுதிக்கு அவர்கள் வரமுடியாமல் தங்களுக்குத் தாங்களே தடைபோட்டுக்கொண்டு விட்டார்கள். பாவம்.

* * *

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும் ஐக்கிய தேசியக் கட்சியும் ஆரம்ப காலத்தில் சிங்களம், தமிழ் இவ்விரு மொழிகளும் அரசாங்கமொழிகளாக இருக்க வேண்டுமென்ற கொள்கையைக் கொண்டிருந்தன. ஆனால் தேர்தல் காரணமாக திடீரென அக்கொள்கையை மாற்றிக் கொண்டு தனிச் சிங்களத் தீர்மானம் செய்தன. இதன் பயனாக அவ்விரு கட்சியிலிருந்தும் பலமுக்கிய தமிழ்த்தலைவர்கள் விலக நேரிட்டது. திரு. சு. நடேசபிள்ளை இது பற்றிப் பார்லிமெண்ட்சபையில் ஆணித்தரமாகப் பேசி ஐக்கியதேசியக் கட்சியிலிருந்து விலகினார். அந்தப் பேச்சு சரித்திர முக்கியம் வாய்ந்தது. அச்சமயம் கட்சித் தலைமைப பதவி சேர் ஜோன் கொத்தலாவலையிடமிருந்தது. கட்சியிலிருந்து சற்றே விலகியிருந்த திரு. டட்லி சேனநாயக்கா, திரு நடேசனின் அந்தப்பேச்சைக் கேட்டுவிட்டு தம்கட்சியின் நிலைமைக்காகவும், மொழிக் கொள்கை மாற்றத்தால் நாட்டுக்கு ஏற்பட இருக்கும் பெருங் கேட்டைக் காதியும் பெரிதும் வருந்தியது பகிரங்க ரகசியம்.

மொழி விஷயமாகத் தமது தந்தை பெரிய சேனநாயக்கா கைக்கொண்ட மேலானகொள்கையை மாற்றியதுபற்றி டட்லிக்குஏமாற்றமும் வருத்தமும் ஏற்பட்டிருக்கலாம். அவர் கட்சித் தலைவராக வந்ததும் இப்பெரிய தவறை மாற்ற ஏதும் முயற்சி செய்வாரென்று ஆவலுடன் எதிர்பார்க்கப்பட்டது. தலைமைப்பதவி அவரிடம் வந்து பல வருடங்களாகியும் இந்தத் தவறைத் திருத்த எதுவும் செய்யாமல் இருந்துவிட்டது பொதுவாகத் தமிழ் பேசும் மக்களுக்குப் பெரும் ஏமாற்றமாகும். தமிழரின் இழந்த அபிமானத்தை மீண்டும் பெற திரு. டட்லி இதுவரை எவ்வித முயற்சியும் எடுத்ததாகத் தெரியவில்லை.

* * *

மொழிப் பிரச்னையைத் தீர்க்க சர்வகட்சிக் கூட்டம் நடத்தும் யோசனைக்கு ஐ.தே. கட்சி ஆதரவு அளித்தது வரவேற்கத்தக்கது. மொழிப் பிரச்னை விஷயமாக யு. என். பி.யைவிட சுதந்திரகட்சி மேலானதென்று ஒரு தமிழ் அரசியல் அன்பர் தெரிவிக்கின்றார். ஏன்? சுதந்திரக்கட்சி மனதிலுள்ளதை ஒளிக்காமல் பச்சையாகப் பேசி காரியம் செய்வதாயும் ஆனால் யு. என். பி.யோ மௌனமாக இருந்து "கழுத்தறுப்ப"தாயும் சொன்னார்.

பொதுவாக தமிழ்பேசும் மக்கள் இவ்விரு கட்சிகள் விஷயமாகவும் "எரிகிற கொள்ளியில் எந்தக் கொள்ளி நல்ல கொள்ளி" என்று இரண்டையும் ஏகேகமாகச் சமமாகவே கருதுகின்றனர். இதுவரை யாழ்ப்பாணக் குடாநாட்டில் இவ்விரு கட்சிகளும் பொதுத் தேர்தலில் ஓர் அபேட்சகரையும் நிறுத்தத் துணியாதது பற்றி அவர்கள் பெருமைப் பட முடியாது. தேசியக்கட்சிகளாக இருந்த இரண்டும் அரசியல் தீர்க்கதரிசனமின்மை காரணமாக வகுப்புவாதக் கட்சிகளாக மாற்றிக் கொண்டுவிட்டன.

* * *

ஆனால் சமசமாஜ், கம்யூனிஸ்ட் கட்சிகள் மொழிவிஷயமாக தமிழ்பேசும் மக்கள் பால் தொடர்ந்து அனுதாபம் காட்டிவந்துள்ளன. இதன்பயனாக தென்னிலங்கையில் வகுப்பு வெறியாளரின் எதிர்ப்புக்கும் உள்ளாகி தேர்தலில் அவர்களுக்குப் பாதகமுமேற்பட்டது. மொழிப்பிரச்னையில் ஒரு சுமுகமான தீர்வு ஏற்பட வேண்டுமென்பதில் இவ்விரு கட்சிகளுக்கும் அதிக ஆர்வமுண்டு. இவ்விரு தேசியகட்சிகளும் பொதுத் தேர்தலில் தீவெங்கும் அபேட்சகர்களை நிறுத்தி போட்டியிடுகின்றன. மொழிப்பிரச்னை நீடிப்பது இவர்களுக்குப் பெருமதடையாகும். சர்வகட்சி மகாநாடுமூலம் இப்பிரச்னை தீருவதை இவ்விரு கட்சிகளும் பெரிதும் வரவேற்கக் காரணமுண்டு.

* * *

எம். ஈ. பி. தலைவரான திரு. பிலிப் குணவர்த்தன தமிழ்மொழிவிஷயமாக வகுப்புவாத மனப்பான்மையைக் காட்டி வந்துள்ளதால் அவர் மீதுதமிழ் பேசும்மக்களுக்குநம்பிக்கை இல்லை. அவர் இடதுசாரி ஐக்கிய முன்னணியில் இருப்பதாலும் அவர் மொழி விஷயமாக தமது மனப்பான்மையைமாற்றிக்கொண்டதாகத் தெரியவில்லையாதலாலும் இந்த முன்னணிபற்றி பொதுவாகத் தமிழ் பேசும் மக்களுக்குப் பல சந்தேகங்களுண்டு இவ்வித பல காரணங்களையும் முன்னிட்டு அரசாங்கக் கட்சி மட்டுமன்றி யு. என். பி.இடதுசாரிக் கட்சிகளும் சர்வகட்சி மகாநாடு கூட்டி மொழிப்பிரச்னைக்குச் சீக்கிரத்தில் ஒரு சுமுகமான முடிவைத் தேடுவது அதிக முக்கியமாகும். மொழிப்பிரச்னை நல்லபடியாகத் தீருமாயின் யு. என். பி., சுதந்திரக்கட்சிகளும் மீண்டும் தேசியக்கட்சிகளாக மாறி வடக்கு, கிழக்குப்பகுதியிலும்தேர்தலில் தமிழ் மக்களின் ஆதரவைத் தேடும் துணிச்சல் பெறக் கூடும்.

## 10 ஆயுர்வேத வைத்தியசாலைகள்

கொழும்பு, ஞாயிறு

அரசாங்கத்தின் ஐந்து வருடத் திட்டத்தின்கீழ் ஆயுர்வேத இலாகா பத்து மாவட்ட வைத்தியசாலைகளை ஆரம்பிக்கத் தீர்மானித்திருக்கிறது.

அடுத்த வருட முடிவுக்குள் பெலியட்டையிலும் இரத்தினபுரியிலும் இரு வைத்தியசாலைகள் திறந்துவைக்கப்படும்.

## நாட்டிலும் நகரிலும்

இந்த நெருப்புப்பெட்டிக்குத்தான் என்ன மௌசு வந்துவிட்டது! போதாக்குறைக்கு இன்னும் சிலநாட்களில் நெருப்புப் பெட்டிக்கு தட்டுப்பாடும் ஏற்படலாமென்று வதந்திகள் உலாவுகின்றன. ஒரு பொருளுக்குத் தட்டுப்பாடு வருமென்று அறிந்தவுடனே சில்லறை வியாபாரிகளும் பொதுசனங்களும் அகப்பட்டதைச் சேர்த்துப் பதுக்கி வைத்துவிடுவார்கள். குறித்த காலத்துக்கு முந்தியே தட்டுப்பாட்டை நாங்களே ஏற்படுத்தி விடுகிறோம்!

ஒரு தீப்பெட்டியின் விலை சாதாரண கடைகளில் இப்பொழுது எட்டு சதம் சங்கக் கடைகளில் ஐந்து சதத்துக்கு கொடுக்கிறார்கள். ஆனால் எல்லா சங்கக்கடைகளிலும் தேவையானபோது தீப்பெட்டி இருப்பதில்லை; தீப்பெட்டிவிநியோகத்திலும்ஊழல் இருப்பதாக சங்கக்கடைகள் மீது இன்னொரு குற்றச்சாட்டு!

சுமார் முப்பது முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு மூன்றுநட்சத்திரங்கள் பொறிக்கப்பட்ட 'நட்சத்திரப் பெட்டி' தான் இலங்கை முழுவதிலும் வியாபித்திருந்தது. ஸ்வீடன் தேசத்தில் உற்பத்தி செய்யப்படும் இப்பெட்டி மூன்றே மூன்று சதத்துக்கு கடைகளில் விற்கப்பட்டது. ஆறாயிரம் மைல்களுக்கப்பாலிருந்து வந்த பெட்டி மூன்று சதம் விற்ற காலம்போய் இன்று நம்மூரில் உற்பத்தியாகும் பெட்டிக்கு எட்டுச்சதம் கொடுத்து வாங்கும் காலம் வந்திருக்கிறது!

இந்த நட்சத்திரப் பெட்டியிலுள்ள தீக்குச்சி ஒவ்வொன்றையும் நம்பிக்கையுடன் பற்றவைக்கலாம். பெட்டி நிறைய குச்சிகளும் இருக்கும். இக்காலத்தில் வரும் பெட்டிகள் சிலவற்றில் குச்சிகள் அரை குறையாயிருக்கும். இல்லாவிட்டால் மருந்து இல்லாத குச்சிகள் நிறைய இருக்கும். சில தீக்குச்சிகளைத் தட்டினால் கைவிரல்களையும் எரித்துக் கொள்ள நேரிடும். சில சமயம் ஒரு குச்சியைத் தட்ட பெட்டி முழுவதும் சாம்பலாய்ப் போவதுமுண்டு!

நெருப்புப்பெட்டிக்கு இவ்வளவு கிராக்கி வந்த காரணத்தை ஆராய்ந்து பார்த்தால் மிகவும் ருசிகரமான சில விஷயங்கள் புலப்படுகின்றன. நெருப்புப்பெட்டியே இல்லாத காலமும் ஒன்று இருந்திருக்கிறது. அப்பொழுதெல்லாம் ஒவ்வொரு வீட்டிலும் நெருப்புச்சட்டிகள் உண்டு. காலையில் உலை வைப்பதற்கு நெருப்பு வேண்டுமென்றால் நெருப்புச் சட்டியைக் கிளறி அதற்குள் மின்னிக்கொண்டிருக்கும் கொள்ளியை ஊதி எடுத்து நெருப்புப்பற்ற வைப்பார்கள். ஒரு வீட்டில்நெருப்பு அணைந்து போய்விட்டால் அடுத்த வீட்டுக்குப்போய் நெருப்புக் கொள்ளி கடன் வாங்குவார்கள்.

நெருப்புப் பெட்டிகள் வந்த பின்பும் ஒரு வீட்டில் ஒரு பெட்டி ஒரு மாதம்வரை உபயோகிக்கப்படும். அடுப்புப் பற்றவைப்பதே நெருப்புப் பெட்டியின் முக்கியமான நோக்கம் அந்தக் காலத்தில். முதலாவது உலக யுத்தம் வந்தது. வெள்ளைக்காரப் போர் வீரர்கள் வந்துபோய்த் திரிந்தார்கள். நம்மவர்களும் மிலிட்டரியில் சேர்ந்து வெளித் தேசங்களுக்குப் போனார்கள். சிகரெட் புகைக்கும் வழக்கம் ஏற்பட்டது. முதலாவது உலக யுத்தத்தின் பயனாக நூற்றுக்கு ஐந்து பேர் சிகரெட் புகைக்கப் பழகினார்கள் என்றால், இரண்டாவது உலக யுத்தம் நூற்றுக்கு ஐம்பது பேருக்கும் அப்பழக்கத்தைக் கொடுத்து விட்டது. மிலிட்டரியில் சிகரெட்டுகளை இலவசமாகக் கொடுப்பார்கள். எகிப்துக்கும்

(4-ம் கலம் பார்க்க)

(5-ம் கலத் தொடர்ச்சி)

இத்தாலிக்கும் போருக்குச் சென்ற நமது இலங்கை வாலிபர்கள் சிகரெட் பாக்கட், நெருப்புப் பெட்டி சகிதமாகத் திரும்பினார்கள்.

இன்று நெருப்புப்பெட்டியின் பிரதான நோக்கம் அடுப்புப் பற்றவைப்பதல்ல; பீடி, சிகரெட் பற்றவைப்பதுதான். பத்து வயதுப் பையனின் மடியிலும் இன்று பீடிக்கட்டையும் நெருப்புப் பெட்டியையும் காணலாம். இப்படியாக, புகைக்கும் வழக்கமேதான் நெருப்புப் பெட்டித் தட்டுப்பாட்டுக்குக் காரணம் என்று நிச்சயமாகக் கூற முடியும்.

கடைக்காரர்கள், பீடி சிகரெட் வாங்கும் ஒவ்வொருவருக்கும் நெருப்புப் பெட்டி கொடுத்துக் கட்டுபடியாகாது என்பதை உணர்ந்து, கடை முகப்பில் பற்றவைக்க ஒரு கயிற்றுச் சுருளைத் தொங்கவிட்டிருப்பார்கள். இதனால் அவர்களுக்கு ஒரு நாளைக்கு ஒரு நெருப்புப்பெட்டியாவது லாபம். நம் வீடுகளிலும் இப்படிஒரு கயிற்றைப் பற்ற வைத்துக்கொண்டால் நெருப்புப் பெட்டி அவதி குறையலாமென்று தோன்றுகிறது.

இல்லாவிட்டால்...! புகைக்கும் வழக்கத்தைக் குறைத்துக் கொள்ளலாமா? 'ஐயையோ! அதை மட்டும் கேட்காதீர்கள்! சாப்பிடாமல் இருந்தாலும் இருப்போம்—பீடி புகைப்பதை நிறுத்தமுடியாது!' என்று புகைக்கும் அன்பர்கள் முணுமுணுப்பது கேட்கிறது. ஒரு நாளைக்கு ஒரு கட்டு பீடி புகைப்பவர் கட்டாயம் ஒரு பெட்டி வாங்கியே தீரவேண்டும். பீடிக்கு 45 சதமும் பெட்டிக்கு 8 சதமுமாக 53 சதம் ஒரு நாளில் நெருப்புக்கிரையாகிறதை நினைக்கும்போது வயிற்றில் நெருப்புப் பற்றுகிறது.

—வழிப்போக்கன்

# மதுரையில் ஏற்பட்ட கோர விபத்து!

## பாடசாலை கட்டிடம் இடிந்து 38 மாணவிகள், 2 ஆசிரியர் மாண்டனர்

### காயமடைந்த 128 பேரில் 60 மாணவிகளின் நிலை கவலைக்கிடம்

மதுரை, ஏப்ரல் 5

மதுரை மணிநகரிலுள்ள பெண்கள் உயர்தரப் பாடசாலையொன்று நேற்று இடிந்து விழுந்ததில் முப்பத்தியெட்டு மாணவிகளும் இரு ஆசிரியைகளும் மாண்டனர்! படுகாயமடைந்த நூற்றி இருபத்தெட்டு மாணவிகளிலும் சில ஆசிரியைகளிலும், அறுபது மாணவிகளினதும் இரு ஆசிரியைகளினதும் நிலைமை கவலைக்கிடமாகவிருப்பதாக இன்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இக்கோரச் சம்பவம் நேற்று பிற்பகல் நிகழ்ந்தது. குறிப்பிட்ட பாடசாலையில் நேற்று நடைபெற்ற விசேஷ வகுப்புகளில் 400 மாணவிகள் கலந்து கொண்டனர். சம்பவம்நிகழ்ந்த பொழுது 400 மாணவிகளும் பரீட்சையெழுதிக் கொண்டிருந்தனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பாடசாலையின் கட்டிடம் இடிந்து விழுந்த சமயத்தில் பாடசாலையிலிருந்து உடனடியாக வெளியேற முடியாத மாணவிகளே இப்பரிதாப மரணத்துக்குள்ளானர்கள் என்று அறிவிக்கப்படுகிறது. கட்டிடங்களின் இடிபாடுகளுக்கிடையிலிருந்து 38 மாணவிகளினதும் இரண்டு ஆசிரியைகளினதும் சடலங்களும் வெளியே எடுக்கப்பட்டன. காயமடைந்த மாணவிகளும் சில ஆசிரியைகளும் உடனடியாக ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர். ஆனால் இவர்களில் 60 மாணவிகளினதும் இரு ஆசிரியைகளினதும் உடல்நிலை கவலைக்கிடமாகவிருப்பதாக ஆஸ்பத்திரியிலிருந்து வெளியான செய்தியொன்று கூறுகின்றது.

குறிப்பிட்ட பாடசாலை ஒரு தனியார் பாடசாலையாகும்.

**ராதாகிருஷ்ணன் அனுதாபம்**

மதுரையில் ஏற்பட்ட இப்பரிதாப சம்பவம் குறித்து ராஷ்டிரபதி டாக்டர் ராதாகிருஷ்ணன் தமிழ்நாட்டு முதல் மந்திரி திரு. பக்தவத்சலத்துக்கு அனுதாபச் செய்தியொன்றை அனுப்பியுள்ளார். இக்கோரவிபத்து குறித்து விசாரணை நடைபெறுவதாகத் தெரியதருகிறது.

## லஞ்சஊழல் சட்டம்

ஸ்ரீநகர், ஏப்ரல் 5

காஷ்மீரில் கலகங்களைத் தூண்டிவிடுபவர்கள் அரசாங்கத்தின் விரோதிகளாகக் கருதப்படுவார்கள் என்று காஷ்மீர் பிரதமர் சாதிக் அறிவித்துள்ளார்,

ஸ்ரீநகரில் நேற்று நடைபெற்ற பொதுக் கூட்டமொன்றில் பிரதமர் சாதிக் உரை நிகழ்த்துகையில்தான் மேற்கண்டவாறு கூறினர்.

அரசியல்வாதிகளுக்கும் பொருந்தக்கூடிய வகையில் லஞ்சஊழல் சட்டம் விரைவில் திருத்தியமைக்கப்படுமென்றும் இதுசம்பந்தமான அவசரச் சட்டம் விரைவில் கொண்டுவரப்படுமென்றும் திரு. சாதிக் கூறினர்.

இந்தவகையில் தனது சொத்துக்களின் விபரங்களை முதலில் வெளியிடத் தாம் தயாராகவிருப்பதாகவும் அவர் கூறினர்.

## 'புத்தரின் படத்தை தடைசெய்க'

### சிங்கப்பூர் பிக்கு பிரதமரைக் கோருவார்

கொழும்பு, ஞாயிறு

தற்பொழுது மலேசியாவில் காட்டப்பட்டுவரும் கௌதம புத்தரின் வாழ்க்கை சரித்திரத்தை சித்தரிக்கும் சினிமா படத்தை முற்றாக தடைசெய்யும் படி இலங்கை பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவையும் பௌத்த சங்கத்தையும் நேரில் சந்தித்துக் கேட்பதற்கு சிங்கப்பூரைச் சேர்ந்த பௌத்த பிக்குவான ஆனந்த மங்கள இலங்கைக்கு வந்துள்ளார்.

சிங்கப்பூர் பௌத்த சங்கத்தினரால் இவர் இலங்கைக்கு அனுப்பப்பட்டுள்ளார். இப்படத்தை தடை செய்யும்படி மலேஸியா பிரதமர் துங்கு அப்துல் ரகுமானை கேட்டுக்கொள்ளுமாறு இப்பிக்கு இலங்கை பிரதமரிடம் தெரிவிப்பார்.

## கூட்டு உடன்பாடு: சைப்ரஸ் துண்டித்தது

நிக்கோஷியா, ஏப். 5

கிரீஸ், துருக்கி ஆகிய நாடுகளுடனான தனது கூட்டு உடன்படிக்கையை சைப்பிரஸ் துண்டித்து விட்டது. இது சம்பந்தமான விபரத்தை துருக்கி பிரதமர் திரு. இஸ்மஸ்த இனோனுவுக்கு சைப்பிரஸ் அதிபர் ஆர்ச்பிஷப் மக்காரியோஸ் அனுப்பியுள்ளார்.



சைப்பிரஸ்-துருக்கி-கிரீஸ் ஆகிய நாடுகளிடையே செய்து கொண்ட இவ்வுடன் படிக்கையை துருக்கி மீறிவிட்டதாக சைப்பிரஸ் அரசாங்கம் குற்றம் சாட்டியுள்ளது.

சைப்பிரஸிலுள்ள தனது துருப்புக்களை வாபஸ் பெற துருக்கி மறுத்துவிட்டதென்றும் இதன் விளைவாகவே கூட்டு உடன்படிக்கையை சைப்பிரஸ் நீக்கிவிட்டதென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில் நேற்றுமாலை சைப்பிரஸின் வட மேற்குப் பகுதியில் கிரேக்க-துருக்கி துருப்புகளிடையே சண்டை நடைபெற்றதென்றும், கொக்கெலா என்ற இடத்தில் ஏற்பட்ட சண்டையில் 4 சைப்பிரஸ் கிரேக்க இனத்தவர்கள் காயமடைந்தனர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. நேற்றுப் பகல் ஏற்பட்ட சண்டையில் ஒருவர் மாண்டார் என்றும் அறிவிக்கப்படுகிறது.

## 'சைப்ரஸ் நெருக்கடி மோசமாகவிருக்கிறது'

### அமெரிக்க அதிபர் அச்சம்

வாஷிங்டன், ஏப்ரல் 5

சைப்பிரஸ் நெருக்கடி இன்னும் தீரவில்லையென்றும் அங்கு இப்பொழுதும் நெருக்கடி நிலைமை காணப்படுகிறதென்றும் அமெரிக்க அதிபர் திரு. லின்டன் ஜோன்ஸன் தெரிவித்துள்ளார்.

நேற்று வாஷிங்டனில் நடைபெற்ற பத்திரிகையாளர் மகாநாட்டில் அதிபர் ஜோன்ஸன் பேசுகையில் உலகின் எந்தப் பகுதியிலும் சுதந்திரம் சோதனைக்குட்படுமானல் அதை வலுவாக முறியடிக்க தாம் தயாராகவிருப்பதாகத் தெரிவித்துள்ளார்.

சைப்பிரஸ்பற்றி அதிபர் ஜோன்ஸன் தெரிவிக்கையில் அங்கு மிகவும் நெருக்கடியான நிலை தோன்றியிருக்கிறதென்றும் கூறினர். பனமா நெருக்கடிபற்றி அவர் குறிப்பிடுகையில் [illegible] பிரச்னைகளையும் தீர்க்க அமெரிக்கா முயன்று வருகிறது என்று கூறினர்.



**இனக்கலவரம்**

## பாக்-இந்திய மந்திரிகள் நாளை சந்திப்பர்

புதுடில்லி, ஏப். 5

இந்தியாவிலும் பாகிஸ்தானிலும் வகுப்பு ஒற்றுமையை நிலைநாட்டும்பொருட்டு இரு நாட்டு உள்துறை மந்திரிகளும் செவ்வாய்க்கிழமை புதுடில்லியில் சந்திப்பார்கள்.

சமீப காலமாக கிழக்குப் பாகிஸ்தானில் ஏற்பட்டுவந்த இனக் கலவரங்களைத் தொடர்ந்து அங்கிருந்து வெளியேறும் அகதிகள் பற்றிப் பேச்சுவார்த்தை நடாத்தவேண்டுமென்று இந்தியப் பிரதமர் திரு. நேரு, பாகிஸ்தான் அதிபர் அயூப்கானுக்கு கடிதம் எழுதியிருந்ததும், இந்திய யோசனையை அயூப்கான் ஏற்றுக்கொண்டதும் வாசகர்களுக்கு ஞாபகமிருக்கலாம்.

இனக் கலவரங்கள் சம்பந்தமாக நடைபெறும் இப்பேச்சுவார்த்தைகளுக்கு அடிப்படையான கொள்கைகள் எதுவும் வகுக்கப்படாத போதிலும் பேச்சுவார்த்தைகள் முக்கியமாக கிழக்குப் பாகிஸ்தானிலிருந்து வெளியேறும் அகதிகள் பிரச்னைபற்றித்தான் இருக்குமென்று கருதப்படுகிறது.

இந்திய-பாகிஸ்தான் உறவில் இப்பொழுது ஏற்பட்டுள்ள நெருக்கடிக்கு அகதிகள் பிரச்னைதான் முக்கிய காரணமென்றும் இந்தப் பிரச்னை சுமுகமாகத் தீர்க்கப்பட்டால், இரு நாடுகளிடையேயும் நிலவும் உறவுகளில் நல்ல அறிகுறிகள் காணப்படலாமென்றும் இந்திய அரசாங்க அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

**கண்டனமும் கோரிக்கையும்**

இந்திய லோகசபையில் நேற்று அங்கத்தவரொருவர் பேசுகையில் கிழக்குப் பாகிஸ்தானில் சிறுபான்மை மக்கள் தங்களது மனோநிலையை முற்றாக இழந்துவிட்டனரென்று கூறினர்.

காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த அங்கத்தவரொருவர் பேசுகையில் கிழக்குப் பாகிஸ்தானிலிருந்து அகதிகள் வெளியேறும்பொழுது அவர்கள் எந்தச் சொத்தையும் எடுத்துச்செல்ல முடியாதிருக்கிறதென்றும் அவர்களது உயிருக்கும் உடைமைக்கும் பாகிஸ்தான் பாதுகாப்பளிக்கவேண்டுமென்று பாரதம் கோரவேண்டுமென்றும் கூறினர். செவ்வாய்க்கிழமை நடைபெறும் பாரத-பாகிஸ்தான் உள்துறை மந்திரிகள் கூட்டத்தில் இக்கோரிக்கை கட்டாயப்படுத்தப்பட வேண்டுமென்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

## ஷேக் அப்துல்லா விடுதலை

### ராஜாஜி வரவேற்பு

சென்னை, ஏப். 5

காஷ்மீரின் முன்னாள் பிரதமர் ஷேக் அப்துல்லாவை விடுதலை செய்வதன் மூலம் இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையே ஏற்பட்டுள்ள நெருக்கடிகள் குறைந்து இரு நாடுகளிடையேயான உறவுகள் விருத்திபெறுமென்று சுதந்திரக்கட்சித் தலைவர் திரு. ராஜாஜி தெரிவித்துள்ளார்.

மைலாப்பூர் ஹோட்டலொன்றில் நடைபெற்ற விருந்துபசாரமொன்றில் பேசுகையில்தான் திரு. ராஜாஜி மேற்கண்டவாறு கூறினர்.

அவர் தொடர்ந்து பேசுகையில் ஷேக் அப்துல்லாவை விடுதலைசெய்யத் தீர்மானிக்கப்பட்டிருப்பதில் யாருக்கும் பொறுப்பில்லையென்றும் இம்முடிவு தெய்வாதீனமாக ஏற்பட்டதாகவே சொல்லலாமென்றும் கூறினர்.

## "தமிழ்நாட்டில் தி. மு. க. ஆட்சி செலுத்தவேண்டும்"

### ராஜாஜியின் ஆசை

சென்னை, ஏப். 5

சென்னை ராஜ்யத்தில் நடைபெற்ற நகரசபைத் தேர்தல்களில் தி. மு. கழகத்தினருக்குக் கிடைத்த அமோக வெற்றியும் ராஜயசபைத் தேர்தல்களில் சுதந்திர கட்சிக்கு கிடைத்த வெற்றியும் இந்திய அரசாங்கத்துக்கு குழுறலை உண்டுபண்ணியிருக்கிறதென்று திரு. ராஜாஜி தெரிவித்துள்ளார்.

மயிலாப்பூரில் நடைபெற்ற கூட்டமொன்றில் திரு. ராஜாஜி பேசுகையில்; நகரசபைத் தேர்தல்களில் தி. மு. க., சுதந்திரா, முஸ்லிம் லீக் ஆகியவற்றிடையே ஏற்பட்ட ஒற்றுமையும் ஒத்துழைப்பும் நல்ல பலனைக் கொடுக்குமென்று கூறினர்.

"சென்னை ராஜ்யத்தில் தி. மு. க., அதிகாரத்துக்கு வரவேண்டுமென்று நான் விரும்புகின்றேன். எனது வாழ்நாளிலேயே, தி. மு. க. வினரிடம் ஆட்சிப் பொறுப்பு ஒப்படைக்கப்பட வேண்டும் என்று நான் விரும்புகின்றேன். இதன் மூலமே, நாட்டின் சில பகுதிகளில் ஹிந்தி மொழிக்கு இடம் கிடையாதென்பதை வடநாட்டினருக்கு உணர்த்த முடியும்" என்றும் ராஜாஜி கூறினர்.

## இலவச பாட புத்தகம்

புதுடில்லி, ஏப். 5

கேரளத்தில் இவ்வருடம் பத்துலட்சம் ரூபா பெறுமதியுள்ள பாடசாலைப் புத்தகங்கள் இலவசமாக மாணவர்களுக்கு வழங்கப்படும்.

## படைசாதன உற்பத்தி

புதுடில்லி, ஏப். 5

1963-64-ம் ஆண்டில் படைசாதன உற்பத்தி தொழிற்சாலைகள் 120 கோடி ரூபா பெறுமதியுள்ள ஆயுதங்களையும் சாதனங்களையும் உற்பத்தி செய்திருக்கின்றன என்று பாதுகாப்பு சாதன உற்பத்தி மந்திரி தெரிவித்துள்ளார்.

## கதர் விலை

புதுடில்லி, ஏப். 5

நாளை முதல், கிராமங்களில் கதரின் விலை குறையுமென்றும் ஆனல் நகர்ப்புறங்களில் கதர் விலை அதிகரிக்குமென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## நகரசபையின் தங்க விழா

புதுடில்லி, ஏப். 5

விஜயவாடா நகரசபையின் தங்கவிழாவை காங்கிரஸ் கட்சி தலைவர் காமராஜர் நேற்று ஆரம்பித்து வைத்தார்.

ஆசிரியருக்கு கடிதம்

# நெசவுத் தொழிலுக்கு திருடர் தொல்லை

ஆடை நெய்யும் தொழில் நினைப்பதற்கு எட்டாத நெடுங் காலமாக இலங்கையில் நடை பெற்றுவருகின்றது. அந்நாளில் தமிழரின் சமுதாயத்திலே வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தான் இத்தொழில் விருத்தியடைந்திருந்தது. பட்டு நூலாலும் பருத்தி நூலாலும் பலவகைப்பட்ட ஆடைகள் நெய்யும் தொழிலாளர்களும் இங்கு அதிகமாக வாழ்ந்தார்கள். இவ்வாறு வளர்ச்சியடைந்திருந்த தொழில் பின்னர் இடைக்காலத்திலே விருத்தியடையாமலிருந்தது. இதனால் தொழிலாளர்களும் இத்தொழிலைக் கைவிட்டு விட்டு வேறு தொழில்கள் செய்ய முற்பட்டார்கள். இந்தியாவிலிருந்து ஏராளமான துணிகள் நமக்குக் கிடைத்ததடியால் இத்தொழில் விருத்தியடையாமற் போயிற்று. அரசாங்கமும் அக்காலத்தில் இதற்கு ஏற்ற உதவிகளைச் செய்யாது இருந்தது.


இன்றைய காலத்தில் இத்தொழிலை விருத்தியாக்க அரசாங்கம் போதிய உதவிகளைக் கையாளுகின்றது. பிறநாடுகளிலிருந்து வரவழைக்கப்படும் விலை உயர்ந்த துணிகளை இலங்கையில் இறக்குமதி செய்வதைக் கட்டுப்படுத்தியும் இருக்கின்றது.

இதனால் ஒருவாறு நெசவுத் தொழில் வளர்ச்சியடைந்து வருகின்றது. அத்துடன் பிற நாட்டிலிருந்து துணிகள் இறக்குமதி செய்வதை அரசாங்கம் கட்டுப்படுத்தியதினால் நாட்டில் துணிப் பஞ்சம் ஏற்படவே நம் நாட்டில் துணிகளை உற்பத்திசெய்து அணிய வேண்டுமென்ற உயரிய நோக்கம் மக்கள் மனதில் எழுந்துள்ளது. இதனால் மக்கள் ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் கிராமங்களிலுள்ள நெசவு சாலைகளுக்குச் சென்று தொழிலைப் பழகித் துணிகளை உற்பத்தி செய்ய முன்வந்துள்ளார்கள்.

அக்காலத்திலே ஒரு பகுதியினர் தான் இத்தொழிலைச் செய்தார்கள். ஆனால் இக்காலத்திலே மற்றைய சமூகத்தவர்களும், பள்ளிப் படிப்பு முடிந்தவர்களும், வேலையில்லாத்திண்டாட்டத்தினால் கஷ்டப்படுபவர்களும் மற்றும் சிலரும் இத்தொழிலைக் கற்றுத் துணிகளை உற்பத்திசெய்கின்றார்கள். இவர்கள் தங்களுக்குத் தேவையான துணிகளை உற்பத்தி செய்து பெறுவதுடன் தங்களுக்குத் தேவையான பணத்தையும் தமது உடல் உழைப்பை நல்கிப் பெறுகின்றார்கள்.

இம்மாபெரும் தொழில் மீண்டும் க்ஷீணிக்கும் நிலைக்குத் தற்போது வந்துவிடுமோ என அஞ்சவேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. ஏனெனில் அநேகமானதொழிற்சாலைகளில் உற்பத்திசெய்யப்பட்ட பெருந்தொகைப் பெறுமதியான துணிகள் களவு போகின்றன. குறிப்பாக யாழ்ப்பாண மாவட்டத்தில் திருநெல்வேலி, சங்கானை, அரியாலை, கல்வியங்காடு, வடலியடைப்பு, துன்னாலை முதலிய இடங்களிலுள்ள தொழிற்சாலைகளில், அடுக்கடுக்காக உற்பத்திசெய்யப்பட்ட துணிகள் ஏராளமானவை களவு போய்விட்டன. இதனால் இத்தொழிற்சாலைகளுக்கும் அங்கு வேலைசெய்யும் தொழிலாளர்களுக்கும் அநேக நஷ்டம் ஏற்படுவதுடன் யாழ்ப்பாண நெசவுசாலைகளின் சமாஜம்

(5-ம் பக்கம் பார்க்க)




# அகண்ட தமிழ்நாடு அமைய காப்பியம் செய்தவர் இளங்கோ

## பத்தினித் தெய்வ வழிபாடு ஈழம் பரவியது எப்படி?

— பி. வேலுப்பிள்ளை —

சிந்தனையைத் தூண்டும் சிலப்பதிகாரத்தின் கண் பல அரும் பெரும் பொருள்கள் பொதிந்துள்ளன. தமிழ் உரை நடை வளர்ச்சிக்கு இந்நூல் உதவியது என்பதனை எவரும் மறுப்பதற்குண்டோ? சேர சோழ பாண்டிய நாடுகள் மூன்றையும் அப்பால் ஈழத்தையும் இணைத்து மிகப்பரந்தொரு தமிழகத்தை கண்ட மாபெரும் காவியம் சிலப்பதிகாரம்.

இவ்வாறு அரும் பெரும் பொருள் கொண்ட சிலப்பதிகாரத்தில் வந்துள்ள கண்ணகியென்னும் கற்புடைத்தேவர் மாதே கண்ணகை அம்மனென்று அழைக்கப்பட்டார். அவர் செய்த அற்புதங்கள் அளப்பரியன. கொலைக்களத்தில் வெட்டுண்ட தன் கணவனை உயிர் பெறச் செய்து அப்படி நேர்ந்தமைக்குக் காரணம் அறிந்தார். கணவன் மீட்டும் உயிர்நீர்த்தார். பாண்டியனிடஞ் சென்று வாதாடி உண்மையை எடுத்துரைத்தார். பழிசெய்த பாண்டியன் உயிர் நீர்த்தான். அவ்வளவில் விடாது அம்மையார் அந்நகரையே எரியூட்டினார். அங்கு வாழவிருப்பமின்மையால் இலங்கைக்கு வந்தார்.

மதுரையை எரியூட்டி மங்காத புகழ் பெற்ற அம்மையாரின் அற்புதச் செயல்களை அறிந்தான் சேரன் செங்குட்டுவன். அதற்கான கல்லை இமயமலை அடிவாரத்தினின்றும் கனக விஜயன் தலையிலும் தன் பரிவாரங்களுடனும் கொண்டு வந்து கங்கையாற்றில் நீராட்டுவித்து முறைப்படி கோவில் கட்டுவித்தான். அக்கோவிலில் கண்ணகியின் சிலையை வைப்பித்தான். அப்போது ஒரு விழாக் கொண்டாடப்பட்டது. அவ்விழாவிற் பலர் கலந்து கொண்டனர். இலங்கை மன்னன் கஜவாகுவும் அதிற் பங்குகொண்டான். இலங்கையைக் கஜவாகு கி. பி. 113 –135 வரை ஆட்சி செய்ததாக பரணவிதான கூறுகின்றார். இக்காலத்திலேயே இலங்கைக்குப் பத்தினித்தெய்வ வழிபாட்டுக்குரிய முறைகளைக் கஜவாகு மன்னன் இந்தியாவினின்றும் இங்கு கொணர்ந்து பரப்பினான். இக்காலத்திலேதான் சேரன்செங்குட்டுவனும் கோவில் கட்டியிருக்கவேண்டும். சிலப்பதிகாரத்தில் "கடல் சூழ் இலங்கைக் கயவாகு வேந்தனும்" என்று குறிக்கப் பட்டமையால் அவ்விழாவிற்கு இவ்வரசன் பங்குபற்றியிருக்கக்கூடும்.

"மதுரையை எரியூட்டிய அனலுடன் கற்புக்கரசி கண்ணகை இலங்கைக்கு வந்து முதலில் அனலைதீவில் தங்கினார். அங்கே உழவனொருவனுக்கு, பெண் பனைகளை ஆண் பனைகளாக்கியும், ஆண் பனைகளை ஈஞ்சுகளாக்கியும் அற்புதம்செய்தார். அனலுடன் வந்து தங்கியமையாற்போலும் அவ்விடம் அனலைதீவு என்று அழைக்கப்பட்டிருக்கலாம். அதற்கடுத்தபடி கரையாறிய கரையுடையில் (நவாலி) தங்கினார். அங்கே கரையாறி, அதன பின்னர் அங்கணமை (மாசியப்பிட்டி), ஊரெழு, உடுவில், தெல்லிப்பளை, மாவிட்டபுரம் முதலிய இடங்களுக்கு வந்தார். இதன்பின்னரே மட்டுவிலில் வந்து மாட்டுத் தலையைப் பன்றித்தலையாக்கி நுணுவில், வேலம்பிராய், மந்துவில், கச்சாய், கரம்பகம், போக்கட்டி, விழுவளை, அம்புளுவளை, அறத்திபுதுக் குளம், திரியாய், பொறிக் கடவை, கோவில்குளம், வற்றாப்பளை ஆகிய இடங்களுக்குச் சென்றார்." இவ்வாறு பன்றித் தலைச்சி கண்ணகை அம்மன கோவிலில் வள்ளுவர் குலத்தவரால் பாடப்படும் ஏடு குறிப்பிடுகின்றது.

மட்டுவிலுக்கு அம்மன் எழுந்தருளியதைப்பற்றி ஒரு கர்ண பரம்பரைக் கதையுண்டு. மட்டுவிற் பகுதியில் அம்பாள் எழுந்தருளிய இடம் வள்ளுவர் குலத்தவருக்கே சொந்தமானதென்று சொல்லப்படுகின்றது. அங்கே எழுந்தருளியபோது வள்ளுவர் குலத்தவன் ஒருவனுக்கே காட்சியளித்தது. அவ்வள்ளுவர் குலத்தவனே அம்பாளுக்குக் கோவில் அமைத்து விளக்கேற்றி பூசை செய்ததோடு சேவிலையுஞ் செய்து வந்தான். இப்படிச் செய்யும் நாளில் ஒரு நாள் அம்பாள் அமர்ந்திருக்குமிடத்துக்குக் கிழக்கேயுள்ள காணியின்கண்ணுள்ள வடலிக்குள் பலர் கூட்டுச் சேர்ந்து களவாக மாடொன்றைக் கொன்று இறைச்சியை எடுத்துக்கொண்டு மிகுதியான கால், வால், தலை, தோல் என்பனவற்றை அவ்விடத்திற் புதைத்தனர். இதை அறிந்த மாட்டுச் சொந்தக்காரன் அரசாங்க அதிகாரிகளுக்கு அறிவித்தான். அரசாங்க அதிகாரிகள் அவ்விடத்துக்கு வந்து விளக்கம் நடத்தினர். இவர்கள் புதைத்த கழிவுப் பொருட்களை மிதத்தனர். இறைச்சியைப் பெற்றவனுள் ஒருவனும் அம்பாளின் பூசாரியுமான வள்ளுவர் குலத்தவன் அம்பாளை வரம் வேண்டினான். இருபகுதியினரும் இன்னலுறுவண்ணல் அம்பாள் அருள் புரிந்தார். மாட்டுத்தலையைப் பன்றித் தலையாக்கினார். எல்லோரும் அதிசயித்தனர். அன்று தொட்டு அம்பாளின் அற்புதம் எங்கணும் பரவிற்று. எல்லோரும் வந்து வணங்கி அருள் பெற்றனர். இவ்வாறு அக்கதை கூறுகின்றது. இதனைத் தம் மூதாதையர் கூறியதாக திங்கள் தினத்தன்று ஏட்டைப் படிக்கும் குழுவினருள் ஒருவரான திரு. க. இராசசிங்கம் அவர்கள் அளித்துள்ளார். அன்னார் ஆழ்வாப்பிள்ளையவர்கள் பாடிய பாடலையுந் தந்துள்ளார்.

பாடல் வருமாறு:-

"கற்புக்கருந்ததிதானும் இணையிலா பத்தினியேமமன் பொற்கொடியே, அற்புதமுள்ளவள் அருமைக்கண்ணகைச் செப்புவன் கும்மித் தமிழ்ப்படி, முன்னொருபோது இங்கு நீர் செய்த புதுமையை, முன்னுள்ளவர் சொலக் கேட்டபடி, சின்னஞ் சிறியவன் சொல்லுகின்றேன் இதை, செப்பிடு உண்மையை மாதரவே, மாடொன்றையாரோ களவெடுத்து, வதுன் கிழக்கு வடலிக்குள்ளே கூடியறுத்துத்தலை குடல் தள்ளிப்பின், கொண்டு சென்றாராம் இறைச்சியதை, வாலொடுகாலும் குட்லுந் தலையும் தள்ளிப்பின், வடலிக்குள்ளேயே புதைத்தனராம், மூலஇரகசியத்தைக் கண்டறிந்தபின், முறைப்பாடு சான்றனும் மாட்டுக்காரன், ஊரிலுள்ள தலைமைக்காரன், உடையார் விதானை மணியகாரன், காரியபாகம் விசாரித்தறிந்தபின், கள்ளரும் கண்டுபிடித்தாராம், கிண்டியெடுத்தங்குப் பார்த்தபோது, கிடங்கிலிருந்ததோர் மாட்டுத் தலையை, பன்றித்தலையாக மாற்றினேயாமெங்கள், பன்றித் தலைச்சியம்மாளே கள்ளரும் உன்னை நினைத்தவரும், மாட்டுக்காரரும் உன்னைக் கதைத்தவரும், சன்னுகவொன்றுமில்லாமல், சடைக்கிட்டாயம்மை தாயாரே"

என்று பாடலுண்டு. இவ்வாறு வள்ளுவர் குலத்தவருக்கு வரம் கிடைத்தது. அவர்களே அதை வழிபட்டு பூசை செய்துவந்தனர். இப்படிப் பூசை செய்து வருங்காலத்தில்

(6-ம் பக்கம் பார்க்க)

# வானொலி நிகழ்ச்சிகள்

திங்கள் 6–4–64

## கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 பாமாலை, 6-55 கிறிஸ்தவசிந்தனை, 7-15 தேர்ந்தஇசை, 7-45 மெல்லிசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 நிலைய ஒலிப்பதிவுகள், 5-45 திரை இசை.

இரவு 6-15 கிராமசஞ்சிகை, 6-45 வீணை — ஞானமணி செல்லையா, 7-15 ஜானகி சங்கர ஐயர் — பாட்டு, 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-30 தமிழ் மூலம் சிங்களம், 10-00 நேயர்விருப்பம்.

## திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2-00, இரவு 7-15)

காலை 6-30 மங்களஇசை, 6-55 அருள்வாக்கு, 7-00 துதிப்பாடல்கள், 7-30 அரிமளம் வி. ஸ்ரீனிவாசன் — பாட்டு.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 1-00 திருக்கோயிலூர் அலமேலு அர்ஜுனன் — பாட்டு, 1-30 வாத்தியஇசை, 1-50 கதம்பம், 2-10 கல்வி ஒலிபரப்பு, 2-30 திருக்கோயிலூர், எஸ். அலமேலு அர்ஜுனன் — பாட்டு, 2-40 பொன்னி பாரதம் — தொடர்நிகழ்ச்சி.

மாலை 5-15 திரைப்பட இசை, 5-45 இசைப்பயிற்சி.

இரவு 6-20 கிராமநிகழ்ச்சிகள், 7-30 தபால்பெட்டி, 7-40 ராமநாதபுரம் எம். என். நடராஜ்பிள்ளை — புல்லாங்குழல், 8-40 தேசபக்திப்பாடல்கள், 9-15 வெற்றிவாகை — தொடர்நிகழ்ச்சி, 9-30 மாயூரம் எஸ். ராஜம் — பாட்டு.


றீகல் (யாழ்ப்பாணம்)

REGAL — JAFFNA

NOW SHOWING

Daily at 4-45, 7-00 & 9-45 p. m

Morning Shows

Sats. & Suns. at 10-30 a. m.

○ Ricardo Montalban

○ Vincent Price

in

THE BLACK PIRATE

(Totalscope — Eastman colour)


## வரி அதிகரிப்புக்கு மக்கள் ஆட்சேபம்

கொழும்பு, ஞாயிறு

கொழும்பு மாநகரசபையின் சில வட்டாரங்களில் மதிப்பீட்டு வரியை அதிகரித்ததை யிட்டு பலத்த எதிர்ப்புத் தோன்றியுள்ளது.

கடந்த வருடம் வெள்ளவத்தை வடக்கு, வெள்ளவத்தை தெற்கு, பாமன்கடை மேற்கு, மாளிகாவத்தை ஆகிய வட்டாரங்களில் வரிகளை அதிகரிக்க மாநகரசபை தீர்மானித்தது.

இந்த வட்டாரங்களிலுள்ள வரிசெலுத்துவோர் இந்நிலைமை பற்றி மாநகரசபை அங்கத்தவர்களிடம் தங்கள் எதிர்ப்பைத் தெரிவித்துள்ளார்கள்.

## மருந்துத் தட்டுப்பாடு

காங்கேசன்துறை, ஞாயிறு

காங்கேசன்துறை அரசினர் ஆஸ்பத்திரியிலும் மயிலிட்டி ஆஸ்பத்திரியிலும் ஏற்பட்டுள்ள மருந்துத்தட்டுப்பாடுகள் பற்றி பொதுமக்கள் பட்டினசபைத் தலைவர் திரு. மு. திடவீரசிங்கத்திடம் முறையிட்டுள்ளனர்.

இது சம்பந்தமாக பட்டினசபைத் தலைவர் திரு. திடவீரசிங்கம் பிரதம மந்திரிக்கும், திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகத்திற்கும் தந்தி ஒன்றினை அனுப்பிவைத்துள்ளார்.


கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கொம்பனி வீதி)

வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (மட்டக்களப்பு) ஸ்ரீ கிருஷ்ணா (திருகோணமலை)

விஜிதா (ஹட்டன்) மொடேர்ன் (பதுளை) வெம்பிளி (கண்டி)

கல்யாணி (நாவலப்பிட்டி)




எம். ஜி. ராமச்சந்திரன்—பி. சரோஜாதேவி

எம். ஆர் ராதா - டி. ஆர். ராஜகுமாரி

மற்றும் பலர் நடித்த

பெரிய இடத்துப் பெண்




உயர்

## எஸ். எஸ். இராசரத்தினம்

வான் உயர் தெங்குபோல
வரும் உயர் மரபில்வந்தோன்
தேன் தருந் தமிழும் மேலாம்
சிவநெறித் திருவும் வீறத்
தான் தருஞ் செல்வமெல்லாம்
தவநெறிப்படுத்த சான்றோன்
ஏந்தலெம் இராசரத்ன
னெழுச்சி பல்லூழி வாழ்க!

அராலி விருந்திருக்க உண்ணுத உயர்வேளாள சபாபதிப்பிள்ளைக்கும் கற்பிற் சிறந்த சின்னுச்சிப்பிள்ளைக்கும் ஓர் அவதார புதல்வன். அவருக்கு ஸ்பென்சர் இராசரத்தினம் எனப் பெயரிட்டனைத்தனர். இவர் இளமையில் மிக உன்னத மாணவனுகி நியாயதுரந்தரராகக் கடமை ஆற்றிவந்தார். இவர் நேர்மைக்கு உதாரணமாக வாழ்ந்தார். இவர் 1934 முதல் 1954 வரை நீதிபதியாகக் கடமையாற்றிவந்தார். இவர் காந்திமதி என்னும் பெண்ணை மனையாளாகப் பெற்றார். இவ்வில்லாள் திரு. ஜீ.ஜீ.பொன்னம்பலம் கியூ.ஸி. அவர்களுடைய உடன் சகோதரியாவார். இவர்களுக்கு ஒரு பெண் குழந்தை எஞ்சியுள்ளது. சரஸ்வதி என்ற நாமமுடையாளாவார். இப்பெண்மணியின் காவலன் திரு. தம்பிப்பிள்ளை (எஞ்சினியர்) தற்போது இங்கிலாந்தில் உயர்தரக்கல்வி பயிலுகின்றார்.

இப்பெரியார் இரத்தினபுரியில் ஒரு சிவன் கோவிலும் களுத்துறையில் ஒரு கலியுக வரதனையும் கோவில் கொள்வித்தார். இவர் பல ஆலய திருப்பணிகளுக்குப் பொருள் மறுகைக்குத் தெரியாது அளித்துள்ளார். புகழை விரும்பாத அற்புதன்.

தனது இறுதிக் காலத்தில் பற்றற்ற நிலையில் வாழ எண்ணி கதிர்காமத்தில் வாழ்ந்தார்கள். அங்கேயுள்ள பழனி ஆண்டவர் கோவில் செல்லக் கதிர்காமம், உச்சிமலை போன்ற ஆலய பரிபாலனசபையின் முதல்வராய் இருந்தார். இவர் குத்திக் கொல்லப்பட்டதை சமய இலட்சியம் தெரியாதவர் அவதியுறுவர். அவருடைய வீரசுவர்க்கத்தை கலியுகவரதன்மேல் அன்பு கொண்டார் நன்கறிவர்—வாழ்க.

— ஓர் அன்பர்

## நெசவுத் . . .

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

தான் அதிக நஷ்டம் அடைகின்றது. எத்தனையோ இளம் பெண்கள் தமது வீட்டுக் கஷ்டங்களினிமித்தம் காலை 8-30 மணி தொடக்கம் பிற்பகல் 4-30 மணி வரையும் நெற்றி வியர்வை நிலத்தில் சிந்தக் கஷ்டப்பட்டு ஒரு நாளைக்கு ஒரு ரூபாய் ஐம்பது சத வீதம் கூலி பெற்று உற்பத்தி செய்த துணிகள் இவ்வாறு களவு போவதினுல் மனமுடைந்து அவர்கள் தொழிற்சாலைக்கும் போகாது நின்று விடுகின்றார்கள். இவ்வித துர்ச்செயலால் தொழிலாளர், தொழிற்சாலை, சமாஜம் முவியன நஷ்டமடைவதுடன் மாண்புமிக்க மாபெரும் தொழிலின் மதிப்பும், பெருமையும் மங்கிவிட வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

நாகரிகமும் விஞ்ஞானமும் வளர்ந்து உச்சநிலையடைந்துள்ள இக் காலத்தில் மீண்டும் இவ்விழிவான செயல் தொடர்ந்து நடைபெறுமல் அவ்வக்கிராமங்களிலுள்ள கிராம முன்னேற்றச் சங்கங்களும், மாதர்சங்கங்களும், சனசமூகநிலையங்களும் வேண்டிய பாதுகாப்பளித்து மாண்புமிக்க தொழிலையும் பொருளாதாரத்தையும் வளர்ப்பதுடன் நாட்டு மக்களின் தொழில் இல்லாமையையும் நீக்கவேண்டும்.

ச. தம்பையா

பெருமான் கோவிலடி, யாழ்ப்பாணம்.


### ஊர்காவற்றுறை பட்டினசபை

### கேள்வி விளம்பரம்

1964-ம் ஆண்டு சித்திரை மாதம் 18-ந் திகதிசனிக்கிழமை பிற்பகல் 3-00 மணிவரை ஊர்காவற்றுறைப் பட்டினசபைத் தலைவரால் பின்வரும் வேலைகளுக்கு சீல் வைத்த கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

1. பாலாவி ரோட் திருத்த வேலை.
2. மண்குளி கிணற்று திருத்தம்.
3. நாரந்தனைக் கிணற்றடி முட்கம்பி வேலியடைத்தல்.
4. சுருவில் ரோட்டு 2-ம் ஒழுங்கை திருத்தம்.
5. சென்மேரிஸ் நடுத்தெரு திருத்தம்.
6. புளியடி ஒழுங்கை திருத்தம்.

வ. ச. ஐயாத்துரை,
தலைவர்.

பட்டினசபை அலுவலகம்,
ஊர்காவற்றுறை.

1-4-64 307

### தேவை

ஜெயந்திநகர் பலநோக்குக் கூட்டுறவு சங்கத்துக்கு ஒரு விற்பனையாளர் தேவை. பதினறு வயதுக்கு மேற்பட்டவராயும் ஆறும் வகுப்புச் சித்தியடைந்தவராயும் இருத்தல் வேண்டும். 15-4-64 க்கு முன் எழுத்தில் விண்ணப்பிக்கவும்.

சம்பளம் ரூபா 60-00
பிணை ரூபா 250-00

ச. அந்தோனிப்பிள்ளை,
கௌரவ காரியதரிசி.

ஜெயந்திநகர்ப.நோ.கூ.சங்கம்,
உருத்திரபுரம். 308

### IMPORTANT ANNOUNCEMENT

### SECRETARIAL AND ACCOUNTANCY TUTORY

An Institute in Jaffna provides lectures for Examination for December, 1964, for Cost and Works Accountants and Chartered Secretaries commencing from May. Lectures and Tuition by Chartered Accountant, Chartered Secretary, Master of Arts, Bachelor of Laws and Bachelors of Commerce

For particulars apply 1st Floor, Kumaraswamy Buildings, (Opposite Bus Stand), Power House Road, Jaffna. 210

### WANTED

Wanted services Librarian. Females preferred. State amount of security payable. Apply Gnaneswaran, 1st Floor, Kumaraswamy buildings, (Opposite Bus stand), Grand Bazaar, Jaffna. 211

### RENT

Upstair Large room available - water, drainage and allconveniences ApplyGnaneswaran, 1st Floor, Kumaraswamy Buildings (Opposite Bus stand), Grand Bazaar, Jaffna. 212

### St. Paul's Academy

Chavakachcheri

The Registrar is pleaeed to announce the opening of the above Academy on the 15th of April 1964.

209 Registrar

### மாணவர் தேர்ச்சி அறிக்கை

தவணைப் பரீட்சைப் பெறுபேறு குறிக்கும் மாணவர் தேர்ச்சி அறிக்கை சாதாரண காகிதத்தில் அச்சிட்டு அனுப்ப 100க்கு ரு. 5-00 உடன் ஓடர் அனுப்புக. கலாபவனஅச்சகம், பருத்தித்துறை. 204

புன்னகை புரிந்திருங்கள்!




கழுவக்கூடிய சூப்பர் குயிங்க் ரோயல் புளு மை கொட்டுண்ட புடவைகளையும் துணிமணிகளையும் பொறுத்த கவலையே கொள்ளாதீர்கள். ஏனெனில் இந்த மை தான் பாடசாலைக்கும் வீட்டுப் பாவனைக்கும் உகந்த மை. காரணம் மைபட்ட உடைகளைக் கழுவி அலசியதும் கறைகள் மாயமாய் மறைந்து விடுகின்றன.

இது ஒரு பார்க்கர் பேனு கம்பனியின் உற்பத்தி

உலகைரால் அதிகமாக நாடும் பேனைகளைத் தயாரிக்கும் ஸ்தாபனத்தினர்.

### வரி விளம்பரம்

### தேவை

தற்காலிக மின்சார அமைப்பு வேலை செய்யத் தெரிந்தவரும், மின்சார அமைப்பு வேலையிலும், தண்ணீர் பம், தண்ணீர் பைப் வேலையிலும் 10 வருட அனுபவமுள்ள 30 வயதுக்கு மேற்பட்ட ஒரு வேலையாள் தேவை. சம்பள விபரம் ரூபா 150/- தராதரத்தைப்பார்த்துச் சம்பளம் கூட்டிக் கொடுக்கப்படும்.

நியூரோன் எலக்றிக்கல்ஸ், 228, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 206

### அரைச்சலார்

அநேக மக்களின் ஆதரவு பெற்ற சுன்னுகம் "பிறின்ஸ்" புகைப்பட ஸ்தாபனத்தார் 10-வது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு 25-4-64 வரை அரைச்சலார். 62

### றேடியோ

வாங்கவோ, விற்கவோ பழுதுபார்க்கவோ, சிறந்த இடம்.

S. கலைமான்கண்டு & பிரதர், காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 55

### தேவை

ஜெயா பிஸ்கட் தொழிற்சாலையில் உற்பத்தி செய்யும் பிஸ்கட், கேக் போன்ற பொருட்களை கொண்டுசென்று விநியோகம் செய்யக்கூடியவர்கள் தேவை.

நல்ல கொமிஷன் நேரில் வரவும். கிழமையில் காலை 8-00 மணி — 10-00 மணி.

Jeya Biscuit Manufacturers, Thirunelvely, Jaffna. 205

### புகைவண்டியில் இழந்த பொருள்

இன்று(5-4-64)காலை யாழ்ப்பாணம் காங்கேசன்துறைப் புகைவண்டியில் எஞ்சினியரிங் படக்கொப்பிச் சுருள் (40 மட்டில்) ஒன்று இழந்துவிடப்பட்டது. எடுத்துத் தருவோர்க்குத் தக்க சன்மானம் செய்யப்படும். "ஈழநாடு" அலுவலகத்திற் கொடுத்தாற் பணம் கொடுக்கப்படும். 218


## ஆசிரியருக்கு பிரியாவிடை

கொடிகாமம், ஞாயிறு

சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் பல வருடங்களாக சிரேஷ்ட உதவி ஆசிரியராகவிருந்து ஓய்வுபெறும் திரு. க. பேரம்பலத்திற்கு, தலைமையாசிரியர் திரு. எஸ். கே. வானராசன் தலைமையில் ஒரு பிரியாவிடை நடைபெற்றது.

இசைப் புலவர் திரு. சி. செல்லத்துரை பிரிவுபசாரப் பாமாலை பாடி வழங்கினர். திருவாளர்கள் தில்லைநாதன் சின்னத்தம்பி, குஞ்சரம், சின்னத்தம்பி ஆகியோர் அவரின் சேவையைப் பாராட்டிப்பேசினர்கள்.

# திருக்கேதீச்சர ஆலய அலங்காரஉற்சவவிழா

திருக்கேதீச்சரம், ஞாயிறு

திருக்கேதீச்சர ஆலய அலங்கார உற்சவவிழா இம்மாதம் 10-ம் திகதி முதல் 26-ம் திகதி வரை நடைபெறும். எதிர்வரும் வெள்ளிக்கிழமை திருக்கேதீச்சரநாத சுவாமி திருவருளை முன்னிட்டு திருக்கேதீச்சர ஆலயத்தில் விசேட ஸ்நபன அபிஷேக பூசை வைபவங்களுடன் அலங்காரோற்சவம் ஆரம்பமாகும். இன்று ஈழத்தின் இரு கண்களில் ஒன்ருய் விளங்கும் கோணேச்சரப் பெருமானின் "பாவநாசக" தீர்த்தத்தை திருக்கோணமலைச் சைவ அடியார்கள் பக்திபூர்வமான ஆராதனைகளுடன் திருக்கேதீச்சரம் கொண்டுவந்து கௌரிநாயகி சமேத கேதீச்சரநாதருக்கு அபிஷேகம் செய்விப்பார்கள். இரவு சுவாமி அம்பாள் திருவுலாக்காட்சி நடைபெறும். தொடர்ந்து வரும் 16 தினங்களும் விசேடபூசை, அபிசேகம், விழா நடைபெறும்.

**உபயங்களின் விபரம்:**

9-ம் திகதி ஆரம்பபூசை, வாஸ்துசாந்தி முதலியன. 1-ம் திருவிழா (10-4-64) திருக்கோணமலைச் சைவ அடியார்கள்; 2-ம் திருவிழா மட்டக்களப்பு சைவ அடியார்கள்; 3-ம் திருவிழா மத்தியமாகாண சைவமகாசபை; குரோதி வருடப்பிறப்புவிழா திரு. ச. மகாலிங்கம் சதுமலை; 4-ம் திருவிழா இந்துக்கல்லூரி, யாழ்நகர் கல்லூரி, காரைநகர்; 5-ம் திருவிழா இந்துக்கல்லூரி வட்டுக்கோட்டை; 6-ம் திருவிழா இந்துக்கல்லூரி, கொழும்பு; 7-ம் திருவிழா வைத்தீஸ்வர வித்தியாலயம் வண்ணார்பண்ணை; 8-ம் திருவிழா மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பளை; 9-ம் திருவிழா இந்துக்கல்லூரி, கொக்குவில்; 10-ம் திருவிழா இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம்; 11-ம் திருவிழா ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை; 12-ம் திருவிழா ஹற்றன் டிக்ஓயா சைவமகாசபை; 13-ம் திருவிழா இந்துக்கல்லூரி, மானிப்பாய்; 14-ம் திருவிழா மன்னார் சைவ வர்த்தகசங்கம்; 15-ம் திருவிழா பரமேஸ்வரக் கல்லூரி, திருநெல்வேலி; 16-ம் திருவிழா(26-4-64) பகல்-தீர்த்தம் மன்னார் மாந்தை சைவ அடியார்கள்; இரவு- பூங்காத் திருவிழா இந்துக்கல்லூரி, உரும்பராய்.

### திருமலையில்

திருக்கேதீச்சர அலங்கார உற்சவவிழா முதலாம் திருவிழாவின் நிகழ்ச்சிகள்: 9-ம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 6 மணிக்கு திருக்கோணேஸ்வரத்திலுள்ள "பாபநாச" தீர்த்தத்தை எடுத்து ஊர்வலமாகக் கொண்டு வந்து வில்லூன்றிக் கந்தசுவாமி கோவிலில் வைத்தல். 10-ம் திகதி காலை 5 மணிக்கு கந்தசுவாமி கோயிலில் இருந்து தீர்த்தத்துடன் புறப்படுதல். 10 மணிக்கு "பாபநாச" தீர்த்தத்தை திருக்கேதீச்சர ஆலய திருப்பணிச்சபையினர் வரவேற்று மாந்தைச் சந்தியிலிருந்து ஊர்வலமாய்க் கொண்டு செல்லுதல். 11மணிக்கு கௌரி சமேத கேதீச்சரநாதருக்கு அபிஷேகம். கூட்டுப்பிரார்த்தனை, பக்திப் பாடல்களுடன் 10 மணிக்கு அலங்கார உற்சவ விழா நடைபெறும்.

---

## அகண்டதமிழ்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

திருக்கேணிக்குக் கிழக்குப் பக்கத்திலுள்ள சோலையுள் "முடிபுனைந்த புலைசோமர்" பாடிய ஏடு கொடுக்கப்பட்டது. இவ்வேடு பங்குனிமாதத்துத் திங்கட்கிழமைகளில் பாடவேண்டுமென்று பணிக்கப்பட்டது. அவ்வாறே வள்ளுவர் குலத்தவரும் செய்துவந்தனர்.

காலப்போக்கில் அதிகாரம் பெற்ற வேளாளர் அதைத் தமக்காக்கினர். ஆயினும் வள்ளுவர் குலத்தவர் உரிமையை விட்டாரில்லை. பங்குனி மாத முதற்திங்கள் உபயகாரர் வள்ளுவர் குலத்தவரேயாவர். அவர்களுக்கே முதலிடம் கொடுக்கப்பட்டது. அவர்கள் ஆண்டுதோறும் அவ் ஏட்டை தாளவாத்தியங்களுடன் பங்குனி மாதத் திங்கட்கிழமைகளிற் படிப்பதை இன்றுங் காணலாம். அவ் ஏட்டின் கண் கோவலன் கண்ணகையம்மன் வரலாறும், கப்பற்பாக்கள் பலவும், விருத்தப்பாக்கள் சிலவும் அமைந்துள்ளன. இளங்கோவடிகளார் இயற்றிய சிலப்பதிகாரத்துக்கும் இதற்கும் மாற்றங்கள் சிலவிருக்கின்றன.

இன்னும் வள்ளுவர்குலத்தவர் வழிபடுந் தெய்வங்களுள் முதன்மை வாய்ந்தது ஆயிரங் கண்ணுடைய அம்பாள் தெய்வமாகும். அம்பாள் கொடுத்த "எச்சேரியழிந்தாலும் இடைச்சேரியழியாது, பக்கத் தெரு எரிந்தாலும் பறைய தெரு வேகாது" என்ற அருள்வாக்கைஅழியவிடாது பேணிக் காத்துவருகின்றனர்.

அம்பாளின் அற்புதங்கள் அகிலத்துக்கும் பரவுமளவும் வந்தது. புகழ் எங்கும் பரவிற்று. எல்லோரும் வந்து வணங்கிச் செல்கின்றனர். பங்குனித்திங்கள் தினத்துக்கு ஆயிரக்கணக்கான மக்கள் வந்து வழிபட்டுச் செல்வர். இவ்வாறு பழம் பெரும் புகழ் வாய்ந்த பன்றித்தலைச்சி கண்ணகை அம்மனை நாம் மேன்மேலும் தொழுது பயன்பெறுவோமாக.

"மண்கொண்ட விண்புகழும்
மட்டுவிலம்பதியில்
பண்கொண்டு பலர்பாடும்.
பெருமையளான
'கண்ணகியம்மனெனும்'
கற்புடைத் தெய்வத்தின்
எண்ணிலாம் பெருமைதனை
ஏற்றித்தொழுவம்யாம்"

---

## உயர்விலும் தாழ்விலும்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

திரு. கொல்வின் ஆர். டி சில்வா பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

சிறிமாவோ அரசாங்கம் நடுவழிப்பாதையின் இறுதிக்கட்டத்துக்கு வந்துவிட்டது. அதன் வங்குரோத்து அம்பலமாகிவிட்டது. அதேபோல் வடபகுதியிலும் சமஷ்டிக் கட்சியின் இனவாத போராட்டக் கொள்கை கடைசிக் கட்டத்துக்கு வந்துவிட்டது. முதலாளத்துவம் என்ற பொதுப் பிரச்னையின் ஒரு அம்சம்தான் மொழிப்பிரச்னை. இந்த அரசாங்கத்தில் ஒருவருடகாலத்தில் 4 நிதிமந்திரிகள் பதவி ஏற்றதால் நாட்டின் நிதி நிலைமை மோசமாகியது. தற்பொழுது எல்லா அரசாங்க இலாகாக்களிலும் வேலைகள் ஸ்தம்பித்துவிட்டன. ஆனல் வடபகுதியில் உள்ள கடற்படை இலாகா மட்டும்தான் துரிதமாக செயலாற்றிக் கொண்டிருக்கிறது. அதுவும் சரியானமுறையில் இயங்கவில்லை.

தற்போதைய நெருக்கடியான நிலைமைபற்றி அரசாங்கம் கவனமாகச் சிந்திக்கவில்லை. நாட்டில் கஷ்டமிருக்கிறதென்பதைமட்டுமே அரசாங்கம் கூறுகிறது. இக் கஷ்டங்களிலிருந்து விடுபட சர்வாதிகாரம், இடதுசாரி கூட்டு அரசாங்கம், தேசிய அரசாங்கம் ஆகிய மூன்று வழிகளில் ஒன்றைக் கையாளவேண்டுமென பிரதமர் கூறிவருகிருர்.

இடதுசாரியினருக்கு மக்கள் ஆதரவு பெருகிவருவதை யுணர்ந்த அரசாங்கம் இடதுசாரி முன்னணி ஆதரவைக் கொண்டு தமது திறமையற்ற அரசாங்கத்தைப் பலப்படுத்த முயற்சிக்கிறது. ஆனல் இடதுசாரி முன்னணி அரசாங்கத்துக்கு ஆதரவு கொடுக்கக் கூடாது என லங்கா சமசமாஜக் கட்சி முடிவு செய்துள்ளது.

திரு. ரத்னவீர பேசுகையில் குறிப்பிட்டதாவது:

"குற்றுயிரில் இருக்கும் அரசாங்கம் இடதுசாரிகளின் இரத்தத்தை வேண்டி நிற்கிறது. மந்திரிப் பதவிகளைக் கொடுத்து இடதுசாரிகளின் ஆதரவைப்பெற அரசாங்கம் எண்ணுகிறது. கடந்த 25 வருடகாலமாக அடிப்படைக்கொள்கையுடன் போராடிவரும் இடதுசாரியினர் சிலமந்திரிப் பதவிக்காக உதவமாட்டோம்.

இலங்கையின் அரசியல் நிலைமை பற்றி அமெரிக்க நிபுணர் ஒருவர் வாஷிங்டனுக்கு அறிக்கை சமர்ப்பித்துள்ளாராம். பல்வேறு நாடுகளில் ஏற்படும் சீர்கேடான சூழ்லைகளை பயன்படுத்தி அந்த நாடுகளை தங்கள் கைப்பொம்மைகளாக்க முதலாளித்துவ நாடுகள் முயற்சிக்கின்றன. கலங்கிய குளத்தில் மீனபிடிப்பதற்காக இவர்கள் காத்திருக்கின்றனர். இலங்கை போன்ற நாடுகள் முதலாளித்துவ நாடுகளிடமிருந்து கடன்பெற்று பிரச்னைகளைத் தீர்க்க முடியாது.

இந்தநேரம் சுதந்திரக்கட்சி அரசாங்கத்துக்கு இடதுசாரிகள் ஆதரவு கொடுக்கத் தவறினல் இடதுசாரி இயக்கத்துக்கே நாம் உலைவைத்து யு. என். பி. அதிகாரத்தைப் பெறுவதற்கு உதவுபவர்களாவோம்.

திரு. எட்மண்ட் சமரக்கொடி பேசுகையில் குறிப்பிட்டதாவது:-

"தமிழ் பேசும் மக்களின் பிரச்னை பெருகி உச்சநிலையை அடைந்திருக்கிறது. தமிழ் பேசும் மக்களுக்கு சம உரிமை அளித்து பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு இந்த அரசாங்கத்திடம் வலுவில்லை. இராணுவத்தை அனுப்பி பிரச்னைகளைத் தீர்க்கலாம் என அரசாங்கம் எண்ணுகிறது தமது உரிமைகளைக் கோரியோ, பிரச்னைகளைத் தெரிவிக்கவோ அமைதியாக எதிர்ப்புத் தெரிவிக்கும் உரிமை எவருக்கும் உண்டு. தமது பிரச்னைகளைக்கூறி அமைதியாக எதிர்ப்புத் தெரிவித்த தமிழ் பேசும் மக்களை அரசாங்கம் இராணுவத்தைக் கொண்டு தாக்கியது. இப்படியான அரசாங்கத்துக்கு தமிழ் மக்கள் எவ்வாறு ஒத்துழைப்பு நல்கமுடியும்?

தமிழ் மாணவர்களுக்கு சிங்களத்தில் கடிதம் அனுப்பப்படுகிறது. தனிச் சிங்கள அமுலினல் பல தமிழ் உத்தியோகஸ்தர்கள் வேலையை இழந்துள்ளனர்.

இடதுசாரிகளுடன் கூட்டு அரசாங்கம் அமைக்கப் பிரதமர் முயற்சிக்கிருர். ஆனல் நாம் சேரமாட்டோம். என்று தீர்மானித்து விட்டோம். கூட்டு அரசாங்கத்தில் சமசமாஜக் கட்சி ஒருபோதும் சேராது. சிறிலங்கா சுதந்திரக்கட்சியுடன் இடதுசாரிகள் கூட்டுச் சேராவிடில், யு. என். பி.யுடன் கூட்டுச்சேரும் எனச் சிலர் கூறுகின்றனர். யு.என். பியை எதிர்ப்பதற்காக இன்னெரு முதலாளித்துவக் கட்சிக்கு ஆதரவு கொடுக்க க்கூடாது.

எந்த சூழ்நிலையிலும் எமது ஆதரவை அரசாங்கத்துக்கு அளிக்கக்கூடாது. சுதந்திரக் கட்சியில் உள்ள முற்போக்குவாதிகள் அரசாத்தின் பிற்போக்குத்தனத்தால் எங்களுடன் சேரவேண்டியதேசரியானதாகும்.

தமிழ்பேசும் மக்களுக்கு சிங்களத்தில் சுற்றுநிருபம் அனுப்பியும், தொழிலாளர்களின் உரிமைகளை மறுத்தும் வரும் அரசாங்கம் எவ்வாறு மனம் மாறும் என நம்பலாம். தமிழ் பேசும் மக்கள் தங்கள் பிரச்னைகளைத் தீர்க்க இடதுசாரியுடன் சேர்வதே வழியாகும்.

---

## "அரசாங்கத்தின்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வேறு திட்டங்கள் மேற்கொள்ளப்படவிருக்கின்றன என்றும் கூறினர்.

"இதனுடன் 2000 ஏக்கர் கொண்ட இலங்கையின் சிறந்த தேயிலை நிலத்தையும் அரசாங்கம் சுவீகரிக்கவிருக்கிறது. மஸ்கேலியாஓயா நீர் - மின்சாரத் திட்டத்தின் கீழ் இந்நிலம் சுவீகரிக்கப்படுகிறது என்றும் அவர் கூறினர்.

"எங்களது பொருளாதாரநிலை குறைந்துள்ளது. ஆனல் வரிகள் உயர்ந்துகொண்டே போகின்றன. இறக்குமதிக் கட்டுப்பாடுகள் காரணமாக தோட்டத் தொழில்கள் பாதிக்கப்பட்டுள்ளன. இதனல் நாட்டின் முன்னேற்றம் தடைப்பட்டுள்ளதுடன் உற்பத்தியும் பாதிக்கப்பட்டுள்ளது. அதிகமான வரிகளினல், எமக்கு பல அபாயங்கள் ஏற்பட்டுள்ளன. அதிகமான வரிகள் எமது கைத்தொழில்களுக்கு நீண்டகால நஷ்டத்தை விளைவிக்கும் என அஞ்சுகிறேன்" என்றும் திரு. ரத்னயக்கா கூறினர்.

### புதிய தலைவர்

தோட்ட முதலாளிமார் சங்கத்தின் புதிய தலைவராக திரு. ஜே. டபிள்யு. சில்டர்ஸ்ரோன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

### மந்திரியின் பேச்சு

நேற்று நடைபெற்ற தோட்ட முதலாளிமார் சங்கத்தின் 110-வது வருடாந்தக் கூட்டத்துக்கு தபால் பொது மராமத்து பகுதி மந்திரி திரு மைக்கல் சிறிவர்த்தனவும் வந்திருந்தார். கூட்டத்தில் அவர் உரை நிகழ்த்துகையில்; கொழும்பு துறைமுகத்தை அபிவிருத்தி செய்யும் பொருட்டு அரசாங்கம் எடுத்த முதல் நடவடிக்கை திரு. சந்திரசோமாவை துறைமுக சரக்கு கார்ப்பரேஷன் தலைவராக நியமனம் செய்ததே என்று கூறினர்.

உள்ளூர் ஏற்றுமதிப் பொருட்களை தரமான முறையில் துரிதமாகச் செய்வதையிட்டு தோட்ட முதலாளிமார் சங்கத்தை மந்திரி பாராட்டினர்.

---

## ஜி. ஜி. க்கு சிலை யாழ். நூல்நிலையத்தில் நிறுவப்படும்

நல்லூர், ஞாயிறு

யாழ்ப்பாணம் முன்னுள் எம். பி. யும் பிரபல வழக்கறிஞருமான திரு. ஜி. ஜி. பொன்னம்பலத்தின் உருவச்சிலையை யாழ்ப்பாணம் பொதுஜன நூல்நிலையத்தில் நிறுவ அனுமதி வழங்குவதென நூல்நிலைய நிர்வாகக்குழு முடிவு செய்துள்ளது.

யாழ்ப்பாணம் மேயர் திரு. டி. எஸ். துரைராஜா தலைமையில் நடைபெற்ற நூல்நிலையக் கமிட்டிக் கூட்டத்தில் மேற்கண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. திரு. பொன்னம்பலத்தின் உருவச்சிலை கமிட்டியின் கைக்குக் கிடைத்ததும் உருவச்சிலை நிறுவுமிடம் பற்றி தீர்மானிப்பதெனவும் ஆலோசிக்கப்பட்டது.

சுதந்திரதினம், வெசாக் விடுமுறை தினங்களில் நூல்நிலையத்தை திறந்து வைத்திருப்பதெனவும் முடிவுசெய்யப்பட்டது. புத்தகங்கள் தெரிவுசெய்வதற்காக ஒரு உப கமிட்டியும் தெரிவுசெய்யப்பட்டது.

---

## உலகசுகாதார தினம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

அகில உலக சுகாதார தினம் இம்மாதம் 7-ம் திகதி யாழ்ப்பாணத்திலும் கொண்டாடப்படவிருக்கிறது. இதையொட்டி கொக்குவில் கிருபாகர சிசுவப்பிரமணியகோவில் வீதியில் கொககுவில் கிராம சபைத்தலைவர் திரு. சி. அருளம்பலம் ஜே. பி. தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெறவிருக்கிறது. இக்கூட்டத்தில் டாக்டர் கே. கனகரத்தினம், டாக்டர் ஜி. என். நதானியல், டாக்டர் எஸ். நடராஜா, முதலியார் சி. முத்துத்தம்பி, திரு. எஸ். ராஜரத்தினம், முகாந்திரம் ஈ. பி. ராசையா ஆகியோர் உரைநிகழ்த்தவிருக்கிருர்கள்.

தேசிய கயரோக தடுப்புச் சங்கத்தின் யாழ்ப்பாணக் கிளை இதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளது.

---

## பத்திரிகைகளுக்கு பாராட்டு

பொல்காவலை, ஞாயிறு

இந்த நாட்டில் உள்ள மக்கள் தற்போதைய அரசாங்கத்திற்கு, அவர்களின் ஜனநாயக உரிமைகளை பாதுகாப்பதற்கு சந்தர்ப்பம் அளித்துள்ளார்கள். ஆதலால் எனது பெயர் இருக்குமட்டும் இந்நாட்டில் சர்வாதிகார ஆட்சி ஏற்படாது என்று பொல்காவலை எம். பி. திரு. ஸ்டீபன் சமரக்கொடி இங்கு நடைபெற்றக் கூட்டத்தில் பேசுகையில் கூறினர்.

இந்நாட்டின் ஜனநாயக உரிமைகளை பாதுகாப்பதில் பத்திரிகைகள் அதிக அக்கறை ஏற்படுத்தியுள்ளன வென்றும், சர்வாதிகாரம்பற்றி பத்திரிகைகள் மக்களுக்கு முன்னதாகவே எச்சரித்துவளனவென்றும் அவர் தொடர்ந்து பேசும்போது கூறினர்.

---

## ஒத்துழைப்புக்கு கண்டனம்

யாழ்ப்பாணம், திங்கள்

நேற்று யாழ்ப்பாணம் நகர மண்டபத்தில் நடைபெற்ற லங்கா சமசமாஜக் கட்சியின் வடபிரதேச வாலிப சம்மேளனத்தின் இரண்டாவது மகாநாட்டில் பேசிய பெரும்பான்மை அங்கத்தவர்கள் பலர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கத்துக்கு ஒத்துழைப்பு அளிக்கும் யோசனையை வன்மையாகக் கண்டித்தனர்.

---

## பாடசாலைகள் மே 4ல் திறக்கப்படும்

கொழும்பு, ஞாயிறு

இம்மாதம் 7-ம திகதி மூடப்படும் சகல பாடசாலைகளும் அடுத்த மாதம் 4-ம் திகதி மீண்டும் திறக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

முன்னிருந்த அறிவித்தலின்படி இம மாதம் 28-ம் திகதி மீண்டும் திறக்கப்படவிருந்தது.

---

## 'சர்வாதிகார ஆட்சியை தடுக்கவேண்டும்'

தெரனியகலை, ஞாயிறு

'ஜனநாயகத்தை குழிதோண்டிப் புதைக்கவும், சர்வாதிகார ஆட்சியை ஏற்படுத்தவும் முயற்சிகள் நடைபெற்றுவருகிறது. இவை நடைபெறாமல் பொதுமக்கள் தடுக்கவேண்டும்' என்று எதிர்க் கட்சித் தலைவர் திரு. டட்லி சேனநாயக்கா ருவாண்வலையில் நடைபெற்ற கூட்டத்தில் பேசும் போது கூறினர்.

ஆசியாவில் இலங்கை மக்கள் மட்டுமே கடந்த 35 வருடகாலமாக வாக்குரிமை பெற்று வருகிருர்களென்றும், அவர்களின் விருப்பத்திற்கு மாருக ஆட்சிபுரியும் அரசாங்கத்தை வீழ்த்தக்கூடிய சக்தி அவர்களிடம் இருப்பதாகவும் அவர் தொடர்ந்து பேசும் போது கூறினர்.

---

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1964-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் -6ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.